**செவ்வாய் | பங்குனி 1** 📖 மாலை வாசகம் – யோவான் 16:33

# நிறைவான உறவு

புதிதாக திருமணமாகிய இளம் தம்பதிகளானவர்கள், ஆரம்ப நாட்கரிலே, தங்கள் இருவருக்குமிடையேயுள்ள புரிந்துணவும் அன்பும் சம்பூரணமானது என்று திட்டமாக கூறிக் கொண்டார்கள். நாட்கள் கடந்து செல்லும் போது, அவர்கள் வாழ்விலே ஏற்பட்ட எதிர்பாராத திருப்பங்களாலும் சவால்களாலும் அவர்களுக்கிடைய சில கருத்து முரண்பாடுகளை ஏற்பட ஆரம்பித்தது. சில ஆண்டுகள் கடந்து சென்ற போது, தங்களுக்கிடையே உள்ள புரிந்துணர்வு மிகவும் மட் டுப்படுத்தப்பட்டது என்பதையும், இருபகுதியினரும் இன்னும்அதிகமாக உறவிலே வளருவதற்கு இடமுண்டு என்பதையும் அறிந்துணர்ந்து ஏற்றுக் கொண்டார்கள். இந்த பூமியிலே மனிதர்களுக்கிடையிலே பல ஒப்பந்தங்களும், உறவின் பிணைப்புக்களும் ஏற்படுத்தப்படுகின்றது. அந்த உறவிலே சம்மந்தப்பட்ட இருதரத்தாரும் குறைவுள்ளவர்களும், தவறிப்போகக் கூடியவர்களும், மட்டுப்படுத்தப்பட்டவர்களுமாயிருக்கின்றார்கள். இருதரத்தாரும் ஒருவரை ஒருவர் அறிகின்ற அறிவிலே வளரவேண்டும். அந்த வளர்ச்சியின் பாதையிலே இருதரத்தாருடைய உறவுகளுக்கிடையே விரிசல்கள், ஒருவரையொருவர் குறித்த தவறான அபிப்பிராயங்களும்ஏற்படலாம். இந்த பூமிக்குரியவர்களுடைய ஒப்பந்தங்களும் உறவுகளும் இத்தகைய தன்மையுடையதாக இருக்கின்றது. ஆனால் நாம் நம்முடைய ஆத்தும நேசராகிய இயேசுவுடன் நாம் கொண்ட உறவு அப்படிப்பட்டதல்ல. ஆண்டவர் இயேசுவுடனான நாம் கொண்டிருக்கும் உறவிலே நாம் குறைவுள்ளவர்களும், தவறக் கூடியவர்களும், மட்டுப்படுத்தப்பட்டவர்களுமாயிருக்கின்றோம். ஆனால் கர்த்தராகிய இயேசுவோ, சம்பூரணமுள்ளவரும், கிருபை நிறைந்த வரும், யாவற்றையும் அறிந்தவராய் இருக்கின்றார். எனவே, அவரிலே சார்ந்து வாழ்பவர்கள் புத்தியுள்ளவர்களும் பாக்கியம் பெற்றவர்களுமாயிருக்கின்றார்கள். நாம் ஆண்டவராகிய இயேசுவின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் போது, நாம் ஜெயம் எடுக்கின்றவர்களாக இருப்போம். ஏனெனில் அவருடைய ஆளுகையிலே தோல்வியென்பதில்லை. அவருடைய ஆளுகைக்கு உட்பட்டவர்கள் முடிவிலே மகிமையிலே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**மத்தேயு 7:24**

ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக்கட்டினபுத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, உம்மை சார்ந்து வாழ்வதன் மேன்மையும் பாக்கியத்தையும் நான் உணர்ந்து கொள்ளும்படிக்கு, பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெயமெடுக்கும் வாழ்க்கை

பிதாவாகிய தேவனுடைய ஆளுகைக்குள் இருக்கின்றவர்கள் எப்போதும் ஜெயம் கொள்ளுகின்றவராகவே இருக்கின்றார்கள். அந்த ஜெயம் என்ன? பிதாவாகிய தேவனுடைய சித்தமானது, இந்த உலகத்திலே நிறைவேறும்படிக்கு, தங்களுடைய வாழ்க்கையை முற்றிலுமாய் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்பதே அந்த ஜெமாக இருக்கின்றது. ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த போது, ஜெயமெடுக்கும் வாழ்கையின் வழியை நமக்கு செய்து காண்பித்தார். “அந்நாட்களிலே, ஆண்டவராகிய இயேசு ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார். பொழுது விடிந்த போது, அவர் தம்முடைய சீஷர் களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். லூக்கா (6:12-13).” அதாவது, பிதாவாகிய தேவனுடைய சித்தம் இந்த உலகத்திலே நிறைவேற்றுவதற்காக, அப்போஸ்தலர்களை தம் இஷ்டப்படி தெரிந்து கொள்ளாமல், பரலேகத்தின் சித்தம் இந்த பூவுலகிலே நிறை வேறும்படி, தேவனுடைய சமுகத்திலே தனித்திருந்து ஜெபம் பண்ணி னார். அவர் ஜனங்களை அனுப்பிவிட்டபின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையா யிருந்தார். (மத்தேயு 14:23) அவர் அதிகாலையில், இருட்டோடே எழு ந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம் பண்ணினார். (மாற்கு 1:35). இப்படியாக, தனித்திருந்து தம் பிதாவை நோக்கி, ஜெபம் பண்ணி, அவருடைய வழிநடத்திதலுக்காக எப்போதும் காத்திருந்தார். மேலும், அவர் காட்டிக் கொடுக்கப் பட்ட அந்த இராத்திரியிலும், அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் தம் சீஷர்களைவிட்டு விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய், முழங் கால்படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என் னைவிட்டு நீங்கும்படி செய்யும் ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். பிரியமானவர்களே, கருப்பொருளாவது, நாம் ஜெயமெடுக்கும் வாழ்க்கை வாழ்வதற்கு நாம் தனித்திருந்து பிதாவாகிய தேவனிடம் தினமும் ஜெபிக்க வேண்டும்.

**யோவான் 6:38**

**என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.**

**ஜெபம்:** பிதாவாகிய என் தேவனே, உம்முடைய சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றுவதே என் வாழ்க்கையின் மேன்மைன என்பதை அறிந்து வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**புதன்| பங்குனி 3** | 🕮 மாலை வாசகம் – கொலோ 3:15

# தேவனுடைய ஆளுகை

தேவனுடைய ஆளுகை இருக்கும் இடத்திலே, தேவனுடைய சித்தம் நிறைவேற்றும் வெற்றி வாழ்க்கை உண்டு. தேவ சித்தம் நிறைவேறும் இடத்திலே அனுதினமும் தனித்திருந்து, தேவனோடு உறவாடும் ஜெபம் இருக்கும். இந்த வாழ்க்கையானது நீதிமானுடைய வாழ்க்கை. நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ் செய்யும். தேவனுடைய ஆளுகை இல்லாத இடத்திலே மனிதர்கள் தங்கள் சொந்த இஷ்டப்படி வாழ்க்கை நடத்துவார்கள். இவர்கள் உலகத்தை ஜெயம் கொள்ளவததில்லை, மாறாக, உலகம் இவர்களை ஜெயம் கொண்டிருக்கும். அந்த வாழ்க்கையிலே தனித்திருந்து தேவனோடு உறவாடும் ஜெபத்திற்கு இடமில்லை. இப்படிப்பட்டவர்களுடைய கூடாரங்களிலே ஓயாத முறுமுறுப்பு இருக்கும். இன்றைய தியானத்திலே, நாம் நம்மை ஆராய்ந்து பார்க்கும்படிக்கு, நாம் ஒவ்வொருவரும் நம்மிடத்திலே பின்வரும் கேள்விகளை கேட்டுக் கொள்வோம். "தேவன் என்னுடைய வாழ்க்கையில் ஆளுகை செய்கின்றாரா? தேவ சித்தம் நிறைவேற்ற வேண்டும் என்ற வாஞ்சை உள்ளத்தில் உண்டா? நான் அனுதினமும் தேவனுடைய சமுகத்திலே தனித்திருந்து ஜெபிக்கின்றேனா? தேவனுடைய இரட்சிப்பினால் உண்டான ஆனந்த தொனி என் உள்ளத்தில் உண்டா?" தேவன் ஆளுகை செய்யும் நீதிமானுடைய வாழ்க்கையானது உபத்திரவமில்லாத, துன்பங்கள் இல்லாத வாழ்க்கை என்பது பொருள் அல்ல. நீதிமான் துன்பத்தின் மத்தியில் நடந்தாலும், தேவ நீதி நிறைவேறும்படி, தன் வழிகளை தேவனுக்கு ஒப்புவித்து, தேவனுக்காக காத்திருக்கின்றான். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். (சங் 34:19). அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை. (சங் 37:31). மேலும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறுகையில்: உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:33). பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையானது தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றீர்களா? நீங்கள் தேவனுடைய ஆளுகைக்கு உட்படாதிருந்தால் உங்கள் வாழ்க்கையை ஆளுகை செய்து எது? ஆராய்ந்து பாருங்கள்.

**சங்கீதம் 37:31**

**அவனுடையதேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை.**

**ஜெபம்**: சர்வ வல்லமைஉள்ள தேவனே, நீர் இல்லாத வாழ்க்கை தண்ணீரற்ற பாலைவனம் போன்றது. ஒவ்வொரு நாளும் உம்மோடு வாழ்கின்ற வெற்றி வாழ்க்கையை வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய வீட்டின் நன்மைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனானவன், ஊர் மக்கள் மத்தியிலே நன்மதிப்பு பெற்றவனும், உத்தமனும், சன்மார்க்கனும், நற்குணங்கள் நிறைந்தவனுமாயிருந்தான். அவனுடைய வீட்டிலே சமாதானமும், பல நன்மைகளும் இருந்தது. அவனிடம் திரளான ஐசுவரியமும் இருந்தது. அவனுக்கு இரண்டு குமார்கள் இருந்தார்கள். தகப்பனுடைய வீட்டின் நன்மைகள் யாவும் அவர்களுடைய சுதந்திரமாக இருந்தது. அவர்கள் இருவரும், தங்கள் வாய்ப் பேச்சினால், தாங்கள் இன்னாருடைய குமாரர்கள் என்று தகப்பனானவருடைய நற்பெயரை சொல்லிக் கொண்ட போதிலும், அவர்களுடைய இருதயங்களோ, தங்கள் தகப்பனிடமிருந்த உலக ஐசுவரியத்தின் மேலேயே இருந்துது. வீட்டின் நன்மைகளுக்கு பாத்திரமற்றவர்களாக நடந்து, பொருளாசை தங்களை ஆளும்படிக்கு அவர்கள் தங்கள் இருதயங்களை இந்த உலகத்தின் ஆளுகைக்கு ஒப்புக் கொடுத்தார்கள். பிரியமானர்களே, பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்கு பங்காளிகளாக அழைப்பழ பெற்ற நாம். வானம் பூமி படைத்த பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகளாவிருக்கின்றோம். நாம் அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருக்கின்றோம். தேவனுடைய வீட்டின் நன்மைகள் யாவும் நம்முடைய சுதந்திரமாக இருக்கின்றது. பிதவாகிய தேவனுடைய நாமத்தை தரித்த பிள்ளைகளாகிய நாம், அவருடைய திவ்விய சுபாவங்களை வாஞ்சிக்கின்றவர்களாகவும், பரலோக்த்திற்குரிய மேலான நன்மைகள் நாடித் தேடுகின்றவர்களாகவும் இருக்க வேண்டும். கொஞ்சக் காலம், இந்த பூமிக்குரியவைகளுக்கு அந்நியரும் பரதேசிகளுமாயிருந்து, கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு பாடுகளை சகிக்கின்றோம். நாம் இந்தப் பூமிக்குரியவைகளை நாடித் தேடுவோமாக இருந்தால், மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு குமாரர்களைப் போல, வீட்டின் நன்மைகளின் மேன்மைகளை உணர முடியாதவர்களாக, இந்த உலகத்தின் ஆளுகைக்கு உட்பட்டவர்களாக இருப்போம். எனவே நம் இருதயமானது இந்த மண்ணோடு ஓட்டிக் கொள்ள விடாமல், கூடாரவாசிகளைப் போல, நன்மையும் கிருபையும் நிறைந்திருக்கும், நம்முடைய தகப்பனுடைய வீட்டிலே, நீடித்த நாட்களாய் நிலைத்திருக்கும்படி கடந்து செல்வோமாக.

**ரோமர் 8:17**

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே;

**ஜெபம்**: கிறிஸ்துவுக்குள்ளாக நம்மை சுதந்தரராகும்படி தெரிந்துகொண்ட தேவனே, உம்முடை வீட்டின் மேன்மைனாயன நன்மைகளை நாம் நாடித் தேடும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**சனி | பங்குனி 5** 📖 மாலை வாசகம் – கொலோ 3:15

# அவன் செய்ததால் நானும் செய்தேன்...

மாலை வேளையிலே, தங்கள் வீட்டிற்கு பின் புறத்திலே, பிள்ளைகள் பந்து எறிந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். பந்து தவறுதலாக பக்கத்து வீட்டின் வளவிற்குள் விழுந்ததால், அதை எடுக்கும்படிக்கு அந்தப் பிள்ளைகளின் ஒருவன், ஒடிச் சென்றான். அதை கண்டு கொண்ட அயலவன், தான் வளர்த்து வந்த கடி நாயை கட்டவிழ்த்து விட்டான். அந்த நாயானது ஒடிச் சென்று பந்தெடுக்க வந்த சிறு பையனை கடித்து விட்டது. அதை அறிந்து கொண்ட அந்த சிறு பையனின் தகப்பனாவன், ஒரு நாள் சந்தர்ப்பம் ஏற்படும் போது, அந்த அயலவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்று கூறி, தன்னுடைய வீட்டிலே ஒரு கடிக்கும் நாயொன்றை வேண்டி வளர்த்து வந்தான். தனக்கும் ஒரு சந்தர்பம் கிடைக்கும் என்ற முழு எண்ணம்தோடு, அந்த நாளுக்காக காத் திருந்தான். பிரியமானவர்களே, அந்த அயலவன் செய்த வெளியரங் கமாக செயலானது, அவன் இருதயத்தில் என்ன ஆளுகை செய்கின்றது என்பதை வெளிப்படுத்தியது. அயலவனுடைய பொல்லாத இருதயத் திற்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்ட அந்த தகப்பனானவன், தன் இருதயத்திற்குள் பொல்லாப்பை நுழையவிட்டான். இப்போது, இவர்கள் இருவரின் இருதயங்களையும் பொல்லாப்பு செய்யும் எண்ணமே ஆளுகை செய்தது. சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் உடன் சகோதரனொருவன், தன்னுடைய வீட்டிலே ஒரு விஷப்பாம்பை வைத்திருக்க விரும்பினால், நீங்களும் உங்களை பாது காக்கும்படிக்கு ஒரு விஷப்பாம்பை உங்கள் வீட்டில் வளர்த்து வந்தால் உங்களுக்கும் உங்கள் உடன் சகோதரனுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன? மனிதர்களுடைய மனதிலே மறைந்திருக்கும் இருக்கும் கசப்பானது அந்த விஷப்பாம்பை போன்றது. அது மற்றவர்களை தீண்டு முன்னதாக அதை வைத்திருப்பனுடைய வாழ்வின் நிம்மதியை கெடுத்து விடும். அந்த கசப்பானது அந்த மனிதனுடைய வாழ்க்கையை ஆளுகை செய்யும். அந்த அயலவன் எப்போது அந்த விஷப் பாம்பை நீக்கி விடுகின்றானோ அப்போது நானும் என் வீட்டிலிருக்கும் விஷப் பாம்பை நீக்கி விடுவேன் என்று கூறுவது மதியீனமாக இருக்கும். உடன் சகோதரனானவன், கசப்பை தன் உள்ளத்தில் வைத்திருக்க தீர்மானம் செய்தால், அது அவனுடைய முடிவை நிர்ணயிக்கும், அதனால் நீங்கள் உங்கள் இருதயத்தை கேடுள்ளதாக மாற்றிவிடாமல், தேவ சமாதானம் உங்கள் இருதயத்தை ஆளும்படிக்கு, முதலாவதாக கசப்பை அகற்றி விடுங்கள்.

**ரோமர் 6:12**

**உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.**

**ஜெபம்**: நன்மையின் ஊற்றாகிய தேவனே, மற்றவர்களுடைய பொல்லாத வழிகளினாலே நான் என்னை தீட்டுப்படுத்தாதபடிக்கு, என் இருதயத்தில் உம்முடைய சமாதானம் எப்போதும் ஆளுகை செய்யட்டும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆலயத்தின் நிறைவு

இந்த ஆண்டிலே, நம்முடைய சபை ஐக்கியத்திலே நாம் இன்னும் முன்னேற வேண்டிய காரியங்கள் என்ன என்பதைக் குறித்து சபையோர் கலந்துரையாடினார்கள். சபையிலே இருக்கும் வேற்றுமைகள், சில கருத்து முரண்பாடுகள், முறுமுறுப்புகள் போன்ற ஆகாத காரியங்களி லிருந்து நாம் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று சிலர் குறிப்பிட் டார்கள். கூட்டத்தின் முடிவிலே போத கர் சபையோரை நோக்கி: நானும் நீங்களும், வருடத்திற்கு ஒருமுறை அல்ல, அனுதினமும் நம்முடைய வாழ் க்கையை ஆராய்ந்து பார்த்தலும், குறைவுகள் இருக்கும் இடத்தை ஏற் றுக் கொண்டு, முன்னேறிச் செல்வ தும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அத்தி யசியமானது. வேற்றுமைகளும், கருத்து முரண்பாடுகளும், முறுமுறுப்பு க்களும், இந்தக் கட்டிடத்தினாலோ, உள்ளே இருக்கும் தளபாடங்களி னாலோ அல்லது இசைக் கருவிகளினாலோ ஏற்படுத்தப்படுபவைகள் அல்ல. மாறாக, அவை கூடிவரும் விசுவாசிகளின் இருதயங்களிலே இருந்து புறப்பட்டு வருகின்றது. ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தர் கைகளாளே கட்டப்பட்ட வெறும் கட்டிடங்களுக்குள் வாசம் செய்பவர் அல்ல. நீங்கள் தேவனுடைய ஆலய மாயிருக்கிறீர்களென்றும், தேவனு டைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர் களா? *(1 கொரி 3:16)*. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற் றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமா யிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர் களா? *(1 கொரி 6:19-20)*. எனவே, தேவனுடைய ஆலயத்திற்கு ஆகாத வைகள் யாவையும் நாம் நம் இருதயங்களிலிருந்து அகற்றிவிட வேண் டும். இது இந்த சபை ஐக்கியத்தையும் அதன் வளர்ச்சியையும் குறித்த விடயம் மட்டுமல்ல, அதி மேன்மையாக, தேவனுடைய சித்தம் நம் ஒவ் வொருவருடைய வாழ்விலே நிறைவேறும்படிக்கு, நாம் தேவ சாயலிலே அனுதினமும் வளர்ந்து பெருகுவதையும் குறித்ததாகும் என்று ஆலோ சனை கூறினார். ஆம், பிரியமானவர்களே, தேவனுடைய வீடாகிய அவருடைய ஆலயத்தின் நன்மைகள் யாவும் நமக்குரியது என்று நாம் கடந்து நாட்களிலே தியானம் செய்தோம். நாம் அவர் தங்கும் ஆலய மாக இருப்பதால், நமக்குள்ளே அவருடைய வீட்டின் நன்மைகள் நிறை ந்திருக்கும் படிக்கு மாம்சத்தின் கிரியைகள் யாவையும் நம்மை விட்டு அகற்றி விடுவோமாக. அப்பொழுது நாம் செல்லும் இடமெங்கும் தேவ நன்மையை எடுத்துச் செல்கின்றவர்களாக விளங்குவோம்.

**1 கொரிந்தியர் 3:17**

**தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.**

**ஜெபம்:** எங்களுக்குள்ளே வாசம் செய்யும் தேவனே, பரிசுத்த ஆலய த்திற்கு ஆகாத சுபாவங்கள் யாவும் என்னைவிட்டு நீங்கும்படி க்கும், உம்முடைய திவ்விய சுபாவங்களினால் நிறைந்திருக்கவும் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.